بسم الله الرحمن الرحيم

# FOR THE KIND ATTENTION OF AHMADIYYA MUSLIMS

# அஹ்மதியா முஸ்லீம் மக்களின் கவனத்திற்கு

பிரியமானவர்களே,

மனித குலத்தின் வாழ்க்கைக்கு முழுமையான வழிகாட்டியாகும் தீனுல் இஸ்லாம். அந்த தீனுல் இஸ்லாமைப் பரிபூரணமாகப் பின்பற்றுகின்ற மனிதன் எவனோ அவன் நிரந்தரமான வாழ்வுக்கு தகுதி பெற்றுவிடுவான். அதாவது எளிதில் மோட்சத்தை அடைந்து விடுவான். மனுகுலத்திற்காக இறைவன் திருப்தியடைந்தும், நிறைவுபடுத்தியதும், பலப்படுத்தியதுமான ஏகமார்க்கவும் அதுவே தான்.

நமது பூவுலகில் பலவகையான கொள்கைகளும், போதனைகளும், தத்துவங்களும் பரப்புகின்ற ஏராளமான மதங்களையும் இதர ஆன்மீக அமைப்புகளையும் இன்று காணமுடியும். அந்த மதங்களில் இருந்தும், ஆன்மீக அமைப்புகள் இருந்தும், இஸ்லாம் வேறுபட்டு நிற்பதற்கு காரணம், அதன் உயிர்கருத்து அதாவாது உண்மைத் தத்துவம் இறுதிநாள் வரையிலும் நிலைநிற்கும் என்பதினால் ஆகும். ஆனால் இஸ்லாமின் இந்த உயிர்கருத்தை அதாவது உண்மைத் தத்துவத்தை பாரினில் நிலைநாட்டப்படுவதோ, இறைவனிடமிருந்து வருகின்ற அவனது தூதர்கள் மூலமாகத்தான் என்பது எவராலும் மறுக்கயியலாத ஒரு நிஜமாகும். ஆகவே, புனிதமான தீனுல் இஸ்லாமில் இறைவனின் ஏகத்துவத்தை எடுத்துரைப்பதற்காக இறைதூதர்களின் வருகை ஒரு உறுதியான விஷயமாக நமக்கு பார்க்கமுடியும்.

அதைப்பற்றி குர்-ஆன் இவ்வாறு தெரிவிக்கின்றது.

**''ஆதமுடைய மக்களே! உங்களிடம் உங்களில் இருந்தே (நம்) தூதர்கள் வந்து என் வசனங்களை உங்களுக்கு விளக்கினால் அப்போது எவர்கள் பயபக்திகொண்டு திருந்திக் கொண்டார்களோ அவர்களுக்கு அச்சமுமில்லை, அவர்கள் துக்கப்படவுமாட்டார்கள்''** (7-36).

**''நான் உங்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கொடுத்திருக்கின்றேன். பின்னர் உங்களிடம் இருப்பதை மெய்ப்பிக்கும் இறைதூதர்கள் உங்களிடத்தில் வந்தால் நீங்கள் அவர்மீது! ஈமான் கொண்டு அவருக்கு உறுதியாக உதவி செய்ய வேண்டும்''** (3-82).

இறைதூதர்களின் வருகை அதாவது நபிமார்களின் நியோகம் இஸ்லாமின் ஒரு சிறப்புதன்மையும் அதன் நடைமுறையுமாகும். அந்த சிறப்பான நடைமுறையை சந்தேகமின்றி நிரூபிக்கின்ற குர்-ஆன் வசனங்களாகும் மேல் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது. அக் குர்-ஆன் வசனத்திற்கு ஒரு விளக்கமாக 1400 வருடங்களுக்கு முன்னவே தூதுவ அரசன் நபி(ஸ) அவர்கள் கூறிய ஒரு விஷயம் அபுதாவூதில் வந்துள்ள ஒரு ஹதீஸிஸ் இடம்பிடித்துள்ளது. அது இவ்வாறாகும்.

நபி(ஸ) கூறினார்கள்

**''இஸ்லாம் மதத்தை சீர்திருத்த ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும் ஒவ்வொரு முஜத்தீதுகளை அல்லாஹ் அனுப்பிவைப்பான்''.**

மேல்கூறிய குர்-ஆன் வசனங்களேயும் திரு நபி மொழியேயும் நிரூபிக்கும் வகையில் இறைவனால் நியமிக்கப்பட்ட சீர்திருத்தாளர்கள் ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும் அவதரித்துக்கொண்டிருந்தார்கள். ஹிஜ்ரா 1-ம் நூற்றாண்டில் துவங்கிய அந்த இறை உதவி தொகுப்பில் அவதரித்த முதல் நாயகன் ஹஸ்ரத் உமறிப்னு அப்துல் அஸீஸ் ஆவார். அவரை தொடர்ந்து அந்த வரிசையில் 14-ம் நூற்றாண்டில் இஸ்லாமின் புரட்சி மன்னனாக தோன்றியவரே ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது(அ) அவர்கள். வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹான ஹஸ்ரத் அஹ்மது (அ) அவர்களையும், அவர் மீது நம்பிக்கை கொண்டோர்களையும் உலக முஸ்லீம்கள் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்த்தார்கள். அப்போதெல்லாம் அஹ்மதிகள் கருத்தின் அடிப்படையில் எதிராளிகளை எதிர்த்தார்கள்; வென்றார்கள். இப்போதும் அங்கங்கு அந்தக் கருத்துப்போர் நடந்து வருகின்றது. ஹஸ்ரத் அஹ்மது(அ) மின் உண்மைக்கு சிறந்த சான்றாகவும் சுய ஈமானைப் பலப்படுத்துவதற்காகவும் அஹ்மதிகள் அன்று சுட்டிக்காட்டியதும் இன்று சுட்டிக்காட்டுவதும் மேல்கூறிய குர்-ஆன் வசனங்களும் திரு ஹதீஸ் மொழியுமல்லவா? அப்போது 14-ம் நூற்றாண்டில் அவதரித்த இறைதூதரை ஏற்றுக்கொள்வதற்கு அந்த வசனங்கள் போதுமானதுயென்றால், இந்த 15-ம் நூற்றாண்டில் அவதரித்துள்ள இறைதூதரை ஏற்றுக்கொள்வதற்கும் அதே வசனங்கள் போதுமானதல்லவா? இல்லை அன்று அதென்றும், இன்று வேறென்றும் என்றோ நீங்கள் கூறுகின்றீர்கள்? அப்படியென்றால் அது இரண்டு தந்தை வழியும் உண்மையை அறிந்துக்கொண்டே நிராகரிப்பதும் மட்டுமின்றி ஹஸ்ரத் அஹ்மது (அ) மின் உண்மையைக்கூட உள்ளப்பூர்வமாக புறக்கணிப்பதற்கு சமமாகவும் இருக்கும். நடுநிலை உள்ளம் கொண்டோர்கள்

அதைப்பகுத்தறிகின்ற நாள் மிக சமீபமே.

பிரிய சகோதர-சகோதரிகளே,

காலம் வந்து சேர்ந்துவிட்டது. இந்நூற்றாண்டில் எதிர்பார்த்திருந்த நபரும் வந்துவிட்டார். ஒரு இறைதூதரை நிராகரித்துவிட எளிதில் முடியும். ஆனால் ஒரு இறைதூதரை ஏற்றுக்கொள்வதோ மிககடினமான விஷயமாகும். 15-ம் நூற்றாண்டில் இறைதூதரின் வருகைக்கு திரு குர்-ஆன் ஒத்துழைப்பு வழங்குகின்றது. திரு ஹதீஸுகள் அதை உண்மைப்படுத்துகின்றது. அத்தோடு அஹ்மது (அ)மின் கூற்றுகள் கூட அதை சரிவைக்கின்றது. பிறகு வேறென்ன நமக்கு பார்க்க வேண்டும்? இனி என்னை நமக்குத் தெரிய வேண்டும்?. காலகட்டத்தில் நம்மோடு வாழ்ந்திருக்கின்ற இறைதூதரை ஏற்றுக்கொள்ளவும் அவருக்கு உதவிச் செய்யவும் முடிந்தால் அதைவிட மேலான பாக்கியம் வெறென்னை? அது மூலம் கிடைக்கின்ற ஆன்மீக சுகவும் திருப்தியும் வார்த்தைகளால் விளக்கிகாட்டுவதற்கு அப்பார்பட்டதாகும். அதை அடைய பாக்கியம் கிடைக்காத மனித வாழ்வு அர்த்தமற்றதும் வீணானதும் ஆகும்.

எவ்வளவு வேண்டுமென்றாலும் பொய் நியாயங்களும் அவதூறுகளும் படைத்து அதை பிரச்சாரம் செய்து உண்மையை மறுக்க உங்களுக்கு தற்பொழுது முடிந்துவிடலாம். ஆனால் வரலாற்றில் உங்களுக்கு கிடைக்க போகின்ற இடம் ரொம்ப இளுவானதாகயிருக்கும் என்பதை மறந்து விடாதீர். இக்கால கட்டத்தின் இறை தூதர் என்று வாதம் செய்கின்ற ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் சாஹிப் நம்மை இறைவன்பால் அழைக்கின்றார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஒரு இறைதூதரை நிராகரிப்பது உலகில் தோன்றிய அனைத்து இறைதூதர்களேயும் நிராகரிப்பதற்கு சமமாகும், எவ்வித அச்சமின்றி காலகட்டத்தின் இறைதூதரை எதிர்க்கவும் ஏளனம் செய்யவும் தயாராகயிருக்கும் உங்களோடு ஒரு உண்மையைக் கூட சொல்ல இத்தருணத்தில் ஆசைப்படுகின்றோம். அதாவது ஒருவேளை நீங்கள் ஹஸ்ரத் அஹ்மது (அ) மின் காலகட்டத்தில் வாழ்ந்திருந்தால் அந்த மாகாத்மாவை அனுதினம் ஆக்கிரமித்து கொண்டிருந்த அபுஹுசென் பட்டாலவியின் செய்திகளில் ஆனந்தம் கொண்டு நீங்கள் ஆடிப்பாடி மகிழ்ந்திருப்பீர்கள். சந்தேகமில்லை. அதைபோன்றே நீங்கள் நபி(ஸ)வின் காலகட்டத்தில் வாழ்ந்திருந்தால் அவரை துன்புறுத்திகொண்டும், இழிவுப்படுத்திக்கொண்டும் இருந்த அபுஜாஹின் கூப்படைகளாக நீங்கள் இருந்திருப்பீர்கள். அவ்வாறுதான், நீங்கள் ஈசா நபி(அ)மின் கால மக்களாக இருந்திருப்பின் அவரை சிலுவையில் அறைந்து கொல்வதற்காக சிலுவையும், ஆணியும், சுற்றியலும் தயார்செய்தது மற்றாருமாக இருந்திருக்கமாட்டார்கள். ஐயமில்லை நீங்களே தான். மட்டுமின்றி நீங்கள் மூஸா நபி(அ)மின் கூட வாழ்ந்திருந்தால் அவரை நைல் நதியில் மூழ்கி கொல்ல விரட்டிச்சென்ற பிர்அவ்னின் பட்டாள படைகளின் முதல் வரிசையில் நீங்கள் இருந்திருப்பீர்கள். சூலவும், வாளும் கரங்களில் பிடித்து. அப்படி பார்த்தால், இவ்வுலகில் மனித குலத்தை சீர்படுத்த வந்த ஒரு லட்சத்தி இருபத்தி நாலாயிரத்திற்கு மேற்பட்ட இறை தூதர்களை நிராகரித்த, துன்புறுத்திய, புறக்கணித்த, ஆக்கிரமித்த குற்றத்திற்காக மறுமையில் நீங்கள் பிடிப்பட போகின்றீர்கள். ஏன் என்றால், காலகட்டத்தில் உங்களோடு வாழ்ந்திருந்த இறைதூதரை நிராகரித்து விட்டதில் ஏளனம் செய்து விட்டதில், ஆக்கிரமித்து விட்டதில். ஆகேவே இது சாதாரண விஷயமென நினைத்து தள்ளிக்கொள்ளாமல் சற்று கௌரவத்துடன் யோசியுங்கள்.

காலகட்டத்தில் இறைச்செய்தியுமாக வந்திருக்கின்ற ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்களை நிராகரிப்பது இறைகோபத்திற்கு ஆளாக்கும் குற்றமாகும். இறைவன் பேரில் அணைபோட்டு கடந்த சில வருடங்களாக அவர் கூறிவருகின்றார். **‘‘நான் உண்மைவாதியாவேன், நான் இக்காலகட்டத்தின் முஜத்தீத் ஆவேன், நான் இறைவனின் கலீஃபா ஆவேன், நான் இறை தூதராவேன், நான் நபியாவேன், நான் அமீறுல் மூம்மினீன் ஆவேன், நான் மார்க்க வழிகாட்டியாவேன், நான் முஹய்தீன் ஆவேன்’’** என்று..... இதே வார்த்தை... இதே குரல்... கடந்த நூற்றாண்டிலும் ஒருவர் அனுதினம் கதறிக்கதறி கூறிவந்தார். என்னை ஞாபகம் இருக்கின்றதா? அது வேறு எவருமல்ல மதிப்பிற்கும், கண்ணியத்திற்கும், பாசத்திற்முரிய நமது மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் (அ) ஆவார். ஆனால் பெரும்பாலான மக்கள் அந்த குரலுக்கு செவிசாய்க்காமல் அவரை தூக்கி வீசினார்கள். இதை ஒன்றையும் நினைவில் கொண்டு தயவாக நீங்கள் நடுநிலை உள்ளத்தோடு சிந்திக்க தயாராகுங்கள். ஜம-அத்துல் சஹிஹில் இஸ்லாமை பற்றி படியுங்கள். குறைந்தது நாற்பது நாளாவது ‘‘துவா’’ செய்யுங்கள். எங்கள் இதய கதவை திறந்ததுபோல உங்கள் இதய கதவை அல்லாஹ் திறந்து தருவானாக. ஆமீன்.

**Proof Reader**
**Azim Ahmad**
**Sadr Sahibul Faraj**
**Kerala/ TamilNadu**
**E-mail: sahihazisulsat@gmail.com**
**Cell: 09789180817**

**Published by**
**Jamaat Ul-Sahih Al Islam**
**Dawa Department**
**Tamil Nadu. (Regd.No. A/693)**
**Web: www.jamaat-ul-sahih-al-islam.com**